தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 86/பேரூ/2021

நாள் 13.12.2021

திரு. மு. பொன்பாண்டி,
திருவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருவைகுண்டம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சிக்குட்பட்ட, வார்டு எண்.17 நெ.117/4 மகாதேவர் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. பொன்பாண்டி என்பவரின் 04.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.3.2020ல் பெறப்பட்டு, 86/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சிக்குட்பட்ட, வார்டு எண்.17 நெ.117/4 மகாதேவர் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. பொன்பாண்டி என்பவரின் 04.03.2020 நாளிட்ட முறையீட்டு மனுவில், திருவைகுண்டம் பேரூராட்சியில், 1998ஆம் ஆண்டு குப்பைவண்டி ஓட்டுவதற்கு டிரைவராக பணியில் சேர்ந்த திரு. மு. சண்முகம் என்பவர், சரியாக எழுதவோ, படிக்கத் தெரியாத இவருக்கு பணியில் சேரும்போது எவ்விதமான சொந்த வீடோ, நிலமோ எந்தவொரு சொத்தும் கிடையாது என்றும், அடுத்தவேளை சாப்பாட்டுக்கே வழியில்லாத நிலையில்தான் வேலையில் சேர்ந்தார். இவர் பணியில் சேர்ந்ததுமே பல வழியில் பேரூராட்சிக்குச் சொந்தமான பொருட்களை கொள்ளையடிப்பதை தொழிலாக கொண்டுள்ளார். வரும்போது டிராக்டர் மற்றும் டிரைலர் வண்டி 1996ல் வாங்கப்பட்டது.

அதனை ஓட்டி வந்தார். அதற்கு டீசல் வாங்கியே பல லட்சம் கொள்ளையடித்தார். வண்டி சென்ற தெரு, தூரங்களை குறிக்கும் லாக் புக் எழுதுவதில்லை. லாக் புக் எழுதினால் டீசல் கணக்கு தெரிந்துவிடுமென எழுதுவதில்லை. தற்போது 2011ல் அசோக்லைலண்ட் புதிய டிப்பர் லாரி வந்தது. அதனையும் ஒழுங்காக ஓட்டுவதில்லை. லைசென்ஸ் இல்லாத ஒப்பந்த துப்புரவு பணியாளரைக் கொண்டுதான் ஓட்டி வருகிறார். பழுதுபட்டால் தனக்கு வேண்டிய ஒர்க்ஸ்ஷாப்பில் விட்டு பல லட்சக்கணக்கில் பில் வாங்கிக் கொள்ளை நடத்தி வருகிறார். தற்போது 1996ல் வாங்கிய பொது சுகாதார டிராக்டர் மற்றும் டிரைலர், பவர் டில்லர் மற்றும் டேங்கர் வண்டி ஆகியவற்றை நல்ல கண்டிசன் உள்ள நிலையில் 2011க்குப் பின், குறைந்த ஏலத்தில் ஆள்வைத்து எடுத்து, வெளியில் நல்ல விலைக்கு விற்று பல லட்சம் லாபம் பெற்றுள்ளார். திருவைகுண்டம் பேரூராட்சியில் இரண்டு துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடமும், எலெக்ட்ரிஷியன் பணியிடமும் காலியாக உள்ளதால், அத்தனை பணியும் தானே எனக் கூறிக்கொண்டு பகிரங்க கொள்ளையில் ஈடுபட்டு வருகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திருவைகுண்டம் பேரூராட்சிப் பகுதியில் இவரால் குடிநீர் இணைப்புகளுக்கு டெப்பாசிட் தொகை, இணைப்பு சென்டேஜ், பிளம்பர் செலவு என இணைப்புகளுக்கு ரூ.20,000/– முதல் ரூ.25,000/– வரை வாங்கிக்கொண்டு இணைப்புகள் உடனடியாக வழங்கியும் பல ஆண்டுகளாக டிபாசிட் மற்றும் சென்டேஜ் கணக்கில் வரவாக்கப்படாமல் 500–க்கும் மேற்பட்ட கணக்கில் வராத குடிநீர் இணைப்புகள் உள்ளன. அவை, குறிப்பாக மகாதேவர் கோவில் தெரு, கம்மாளர் தெரு, பெரும்பத்து, நாகம் காலனி மற்றும் புதுக்குடியில் கர்ணம் தெரு, சரஸ்வதி அம்மன் கோவில் தெரு, மார்த்தாண்டன் காலனி, புளியங்கா காலனி இன்னும் பல ஏரியாக்களில் கணக்கில் வராமல் திருட்டு இணைப்பால் பேரூராட்சி வருவாய் பல லட்சக் கணக்கில் இழப்பாக ஒடிவருகிறது. பொது சுகாதார சாமான்கள், குடிநீர் திட்ட சாமான்கள், குடிநீர் அடைப்பு, உடைப்பு, அனைத்தும் இவரே பினாமிகள் மூலம் வேலைகளை செய்து வருகிறார். அதற்கான தெப்பக்குளத் தெருவில் கடை எண்.2–ல் மனைவி பெயரில் ராஜம் எண்டர்பிரைஸஸ் என்ற கடையை நடத்திவருகிறார். அந்த கடையில்தான் பேரூராட்சிக்குத் தேவையான சாமான் வாங்கனும். மழைநீர் சேமிப்பு குழாய்கள் இவரிடம் வாங்கிடனும். இல்லாவிட்டால் அந்த வீட்டுக்காரர்களிடம் சண்டையிடுவதும் வழக்கமாக கொண்டுள்ளார். டிப்பர் லாரியை பெரிய அளவில் தீப்பிடிக்கவைத்து பழுதாக்கி பெரிய அளவில் பில்போட எங்கேயோ கொண்டுவிட்டு உள்ளார். ஒராண்டுகாலமாக வண்டியை காணவில்லை. கட்டிட வரைபடங்கள் அங்கீகாரம் பெற இவரைத்தான் பார்க்கனும். அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக இருந்தாலும் இவருக்கு லட்சக்கணக்கில் பணம் கொடுத்தால் முடிந்துவிடும். மேலும் பிளான்களை வாங்கி வீட்டில் கொண்டு வைத்துக்கொள்வார். அவ்வப்போது எடுத்துவருவார். தெரு விளக்குகள் ஒப்பந்தப் பணியாளர்கள் மூலம் மாட்டுவதும், அதற்காக தனியாக பில்போட்டு கொள்ளையடித்து வருகிறார். இவரது மோசடிக்கு அளவே இல்லை. பேரூராட்சியில் அனைத்து திட்டப்பணி டெண்டர்களும் இவரே பினாமி பெயரில் செய்கிறார். சொந்த அண்ணன் மகன் மூலம் பணி செய்யப்பட்டு, பெரிய அளவில் மோசடி நடந்துள்ளது. டீசல், பல வண்டியில் ஓடாத நிலையில், வண்டிகளுக்கு வாங்கியதாக போலி பில்கள் மூலம் பல லட்சங்கள் மோசடி நடந்துள்ளது.

லாக்புக் எந்த வண்டிக்கும் இல்லை. சொத்துவரி விதிப்பு, வீடு பெயர் மாற்றம், கிரையம் பெற சான்று ஆகியவற்றிற்கும் இவருக்கு பல லட்சக்கணக்கில் கொடுத்தால்தான் பணி நடக்கும். இவரது தேவைக்குத்தான் அலுவலக பணியாளர்களை பயன்படுத்தி வருகிறார். இளநிலை உதவியாளர் திரு. ஷேக், துப்புரவு ஆய்வாளர் திரு. தியாகராஜன் என்பவரும், வரக்கூடிய செயல் அலுவலரும் இவருக்கு உடந்தையாக உள்ளனர். பல லட்சக் கணக்கில் ஒவ்வொரு தலைப்புகளில் நடந்துள்ளது. எந்த அதிகாரிக்கும் அளவுக்கு அதிகமான பணத்தை கொடுத்து சரிகட்டி வருகிறார்.

இவர் பெயரில் சொத்துக்கள் வாங்கினால் தெரிந்துவிடும் என மனைவி திருமதி. ராஜம்மாள் பெயரில் திருவைகுண்டம் பேரூராட்சி கீழக்கோட்டை வாசல் தெருவில் ரூ.50 லட்சத்திற்கு குறையாமல் மனை, கட்டுமானம் என கட்டியுள்ளார். தனது சொந்த ஊரான சென்னல்பட்டியில் இவரது தந்தை பெயரில் பிரமாண்டமான வீடு கட்டியுள்ளார். பிள்ளைகளை உயர்கல்வி உயர்ந்த கல்லூரிகளில் அதிக செலவில் படிக்க வைக்கிறார். மனைவியின் ஊரில் நன்செய் நிலங்கள் பினாமி பெயரில் வாங்கி சேர்த்துள்ளார். அவ்வப்போது சேரும் லஞ்சத் தொகையில் பாளையங்கோட்டை கே.டி.சி நகரில் பிளாட்டுகள் பினாமி பெயரில் வாங்கியுள்ளார். இவரது பணிப் பதிவேட்டில் சொத்து பதிவுகள் எதுவுமில்லை. மேலும், பினாமி பெயரில் வேன், கார்கள் வாங்கி நகரில் ஓடுகின்றன. பலே கொள்ளைக்காரரான இவர் மீது குற்ற நடவடிக்கை பதிவு மேற்கொண்டு, இவர் கொள்ளையடித்து வாங்கிய சொத்துக்களை பறிமுதல் செய்திடவும், பேரூராட்சிக்கு பல வகைகளில் நிதியிழப்பு ஏற்படுத்தி, தான் கோடிக்கணக்கில் லஞ்சமாக சேர்த்துள்ள அனைத்தையும் கணக்கிட்டு ஜப்தி செய்திடவேண்டும். பேரூராட்சியில் இவர் மூலம் பயன்பெற்றுவரும் செயல் அலுவலர், கிளார்க் திரு. ஷேக், துப்புரவு ஆய்வாளர் திரு. தியாகராஜன் ஆகியோரையும் விசாரிக்கனும். லாக்புக், குடிநீர் இணைப்புப் பதிவு பதிவேடு, கட்டிட உரிம பதிவேடு ஆகியவற்றை ஆய்வு செய்யனும். ஏற்கனவே அதிக கொள்ளை நடந்ததாக திருநெல்வேலி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் வவுச்சர்கள், ,நாளேடு ஆகியவற்றை எடுத்துச் சென்றுள்ளார். இந்நிலையில் திருட்டு ஊர்ஜிதமாகிறது. அனைத்தையும் விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட குப்பைலாரி டிரைவர் சண்முகத்தை கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள உரிய ஆணையினை பிறப்பிக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 13.8.2021 நாளிட்ட அறிக்கையில் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சியில் 3.5.1999 முதல் இழுவை ஓட்டுநராக திரு. மு. சண்முகம் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைப்பட்ட காலத்தில் 15.4.2020 முதல் கழுகுமலை பேரூராட்சிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டு, பின்பு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1301/2020/ப4 நாள் 09.01.2021–இன்படி கழுகுமலை பேரூராட்சியிலிருந்து பணிமாறுதல் செய்யப்பட்டு 20.1.2021 முதல் திருவைகுண்டம் பேரூராட்சியில் இழுவை ஓட்டுநராக பணிபுரிந்துவருகிறார் என்றும், இவர் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டவரெனவும், 9ஆம் வகுப்புவரை படித்து கனரக ஓட்டுநர் உரிமம் பதிவு செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி பதிவுகள் தனியரது

பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும் மனுதாரர், இழுவை ஓட்டுநர் இயக்கிவந்த டிப்பர் லாரியை பழுதாக்கி ஓராண்டு காலமாக எங்கேயோ கொண்டுவிட்டதாக தவறான புகார் அளித்துள்ளார் என்றும், மேற்படி மினி லாரியானது டி.வி.எஸ் நிறுவனத்தின் மூலம் பழுது நீக்கம் செய்யப்பட்டு, தற்பொழுது காலை மற்றும் மதிய வேளைகளில் சுகாதார பணிக்கு இழுவை ஓட்டுநரால் எடுத்துச்செல்லப்பட்டு, இயக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் பொது சுகாதார வாகனம் செல்லும் தூரத்திற்கு ஏற்ப டீசல் பயன்படுத்தப்படும் அளவினை இழுவை ஓட்டுநரால் லாக் புக்கில் பதிவு செய்யப்பட்டு வருகிறதென்றும், மேலும் வண்டி செல்லும் தூரத்திற்கு ஏற்பவே டீசலும் பயன்படுத்தப்பட்டு, அதற்கு தகுந்தாற்போல் செலவினமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மனுதாரர் இழுவை ஓட்டுநரது மனைவியின் பெயரில் ராஜம் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் மூலமாக திருவைகுண்டம் பேரூராட்சி அலுவலகத்தில் டெண்டர் கொடுத்து பொது சுதாதார சாமான்கள் அலுவலகத்திற்கு கொள்முதல் செய்துவருவதாக கூறியுள்ளார். ஆனால் ராஜம் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் மூலமாக இதுநாள் வரை எந்த வருடமும் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பொதுசுகாதார சாமான்களோ, குடிநீர் திட்ட சாமான்களோ கொள்முதல் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மகாதேவர் கோவில் தெரு, கம்மாளர் தெரு, பெரும்பத்து, நாகன் காலனி, புதுக்குடி கர்ணன் தெரு, சரஸ்வதியம்மன் கோவில் தெரு, மார்த்தாண்டன் காலனி, புளியங்கா காலனி முதலான பகுதிகளில் இழுவை ஓட்டுநரால் குடிநீர் இணைப்புகளுக்கு டெபாசிட் தொகை, சென்டேஜ் பிளம்பர் செலவு என இணைப்புகளுக்கு 20,000/– முதல் 25,000/– வரை வாங்கிக் கொண்டு பல வீடுகளில் கணக்கில் வரவாக்கப்படாமல் குடிநீர் இணைப்புகள் உள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளதற்கு, இழுவை ஓட்டுநர் மறுப்பு தெரிவித்து, கைபட அளித்துள்ள அவரது கடிதத்தினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

4. திருவைகுண்டம் பேரூராட்சி பகுதியில் இழுவை ஓட்டுநர் திரு. மு. சண்முகம் என்பவரது மனைவி ராஜம்மாள் என்ற பெயரில் எல்.ஐ.சி நிறுவனத்தின் மூலமாக கடன் பெறப்பட்டு 2012–இல் வீடு கட்டப்பட்டு, மேற்படி வீடு தனது மகளின் திருமணத்திற்காக கடந்த மார்ச் 2021ல் சிவகாமி என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான ஆவணங்களை பேரூராட்சி அலுவலகத்தில் தனியர் சமர்ப்பித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், பேரூராட்சி கேட்பு பதிவேட்டின்படி மேற்படி வீடானது ராஜம்மாள் என்ற பெயரிலேயே இருந்து வருகிறதென்றும், வீட்டினை விலைக்கு வாங்கிய நபர் இதுவரை அலுவலகத்தில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கவில்லை என்ற விவரத்தினையும் தெரிவித்துள்ளார். இழுவை ஓட்டுநரது சொந்த ஊரான சென்னல்பட்டியில் இவரது தந்தை பெயரில் பிரமாண்டமாக வீடு கட்டியுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது குறித்து அளித்துள்ள விவரத்தில், மேற்படி வீடானது இழுவை ஓட்டுநரது பரம்பரை சொத்து என்றும் அவர் உடன் பிறந்தவர்கள், அவருடைய தந்தை அனைவரும் சேர்ந்து கட்டிய வீடு என்று தனியரை விசாரித்தபோது தெரியவந்ததாகவும், மேலும் தனியர் தற்போது அடிப்படைச் சம்பளம் ரூ.52,000/– பஞ்சப்படி 8840/– ஊதியம்

வாங்கிவருகிறார் என்றும், எனவே அவருடைய பிள்ளைகளை உயர் கல்லூரியில் படிக்கவைப்பதில் எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை என்றும், தனியரது பெயரில் எந்தவித சொத்துக்களும் இல்லாததால் பணிப்பதிவேட்டில் சொத்து பதிவுகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், டீசல் பல வண்டிகளில் ஓடாத நிலையில் வண்டிகளுக்கு டீசல் வாங்கியதாக போலி பில்கள் மூலம் பல இலட்சங்கள் மோசடி நடந்துள்ளதாகவும், லாக் புக் எந்த வண்டிக்கும் இல்லை என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது. ஆனால் திருவைகுண்டம் பேரூராட்சியில் ஒவ்வொரு பொதுசுகாதார வாகனத்திற்கும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பைகளை எடுத்துச் செல்வதற்கு, தேவைக்கு ஏற்ப, டீசல் நிரப்பப்பட்டு பொதுசுதாதார வாகனங்கள் செல்லும் தொலைவு கணக்கீடு செய்யப்பட்டு, லாக் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுவருகிறது என்றும், அதன்படி டீசலுக்கு மேற்கொள்ளப்படும் செலவினங்கள், செலவுச் சீட்டுகள் மூலம் தொகை வழங்கப்பட்டு, தீர்மானத்தில் பொருள் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் செலவுச் சீட்டுகள் தணிக்கைக்கு அனுப்பப்பட்டு வருகிறதென்றும், 2019–2020 வரை தணிக்கை முடிவு பெற்றுள்ளது என்றும் திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

6. திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 20.10.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 30.09.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சியில் தேர்தல் பணிக்கான வாக்காளர் வரைவுப் பட்டியல் தயார் செய்யும் பணி நடைபெற்றுக்கொண்டிருப்பதால், அவரால் 20.10.2021 அன்று நேரடி விசாரணையில் ஆஜராக முடியவில்லை என்றும், கால அவகாசம் நீட்டிப்பு செய்துதருமாறும் தனது 18.10.2021 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டார். முறையீட்டு மனுதாரர் திரு. மு. பொன்பாண்டி 20.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

“தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சியில் ஓட்டுநராகப் பணியில் உள்ள திரு. மு. சண்முகம் என்பவர் பேரூராட்சிக்குச் சொந்தமான வாகனங்களை சேதப்படுத்தியுள்ளார். ஓட்டுநராக பணியாற்றும் இவர் மேற்கண்ட பேரூராட்சியில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருகிறார். இவர் மீதான முறைகேடுகள் குறித்து பலமுறை முறையிட்ட பின்னர், இவரை கழுகுமலைக்கு பணிமாற்றம் செய்தனர். ஆனால், 8 மாதங்களில் மறுபடியும் பணிமாறுதல் பெற்று திருவைகுண்டம் பேரூராட்சியில் பணியில் சேர்ந்து, மறுபடியும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருகிறார். நான் தொடர்ந்து பதினைந்து வருடங்களாக வார்டு கவுன்சிலராக இருந்து வருகிறேன். ஊர் முன்னேற்றம் கருதி எனது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்களின் அடிப்படையில் பேரூராட்சி குப்பைவண்டி ஓட்டுநர் மு. சண்முகம் அவர்களை பணிமாற்றம் செய்திட உரிய ஆணைகளை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தினை வேண்டி கேட்டுக்கொள்கிறேன். எனக்கு தனிப்பட்ட முறையில் ஓட்டுநர் மீது எந்தவிதமான

முன்விரோதமும் கிடையாது என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

7. திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் கோரிக்கையின் அடிப்படையில், அவருக்கான விசாரணையை 27.10.2021ல் மேற்கொள்ளலாமென இம்முறைமன்றம் முடிவுசெய்து அவருக்கு 20.10.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டது. 27.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சியில் கடந்த 12.8.2021 முதல் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். இப்பேரூராட்சியில் 1 டிராக்டர், 1 மினி லாரி மற்றும் டாடா ஏஸ் 1, ஆக மொத்தம் 3 வாகனங்கள் உள்ளன. இதற்காக நிரந்தரமாக ஒரு ஓட்டுநரும், தற்காலிகமாக வெளியிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு ஓட்டுநர்களும், மொத்தம் மூன்று ஓட்டுநர்கள் உள்ளனர். திரு. மு. சண்முகம் என்பவர் 3.5.1999 முதல் இழுவை ஓட்டுநராக பணியாற்றி வருகிறார். நிரந்தர பணியாளரான இவர், இடைப்பட்ட காலத்தில் திருவைகுண்டம் பேரூராட்சியிலிருந்து கழுகுமலை பேரூராட்சிக்கு மாற்றப்பட்டு சில மாதங்களில் மீண்டும் திருவைகுண்டம் பேரூராட்சியிலேயே ஓட்டுநராக பணியில் சேர்ந்துவிட்டார். இவர் ஓட்டும் இழுவை வாகனத்திற்கான Log book இவரால் சரிவர பராமரிக்கப்படவில்லை. மேற்கண்ட புத்தகத்தை பேரூராட்சி இளநிலை உதவியாளர் கேட்கும்போது அதற்கான பதிலை சரிவர அளிக்காமல், காலம்தாழ்த்தி, இவ்விசாரணைக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் அப்புத்தகத்தை கொடுத்தார். எனவே, மேற்கண்ட Log book-ஐ என்னால் பார்வையிட முடியவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மற்ற இரண்டு வாகனங்களுக்கான log book மற்றும் பழைய log book எடுத்துவராததால், அவற்றை இம்முறைமன்றத்தில் சமர்பிக்க இயலவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

8. திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் நா. பத்ரகாளி 27.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பேரூராட்சியில் கடந்த 22.4.2021 முதல் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். இப்பேரூராட்சியில் ஓடும் 3 வாகனங்களின் பதிவேடுகளை பராமரிக்கும் பணியை கவனித்துவரும் நான், மேற்கண்ட புத்தகம் மற்றும் அவற்றை பராமரிப்பது குறித்து கேட்டபோது திரு. சண்முகம், ஓட்டுநர் அதற்கு சரிவர பதில் அளிக்கவில்லை. அதேபோன்று வாகனத்தின் ஆவணங்களை கேட்டபோதும், வாகனத்தில் பழைய log book-ஐ கேட்டபோதும் அவர் அதனை தர மறுத்துவிட்டார். இதனால், மேற்கண்ட log book மற்றும் பதிவேடுகளை செயல் அலுவலரின் பார்வைக்கு என்னால் கொண்டுசெல்ல இயலவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

9. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம், திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கை மற்றும் அவரது 27.10.2021 நாளிட்ட வாக்குமூலம் மற்றும் திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் நா. பத்ரகாளி என்பவர் 27.10.2021 அன்று அளித்த வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வில் கீழ்க்கண்டவைகள் கண்டறியப்பட்டன:-

❖ மனுதாரர் தமது புகார் மனுவுடன் அளித்துள்ள திருவைகுண்டம் சிறப்பு சிற்றூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.120/2006/அ நாள் 31.5.2006ல் திருவைகுண்டம் சிறப்பு சிற்றூராட்சியில் பொது சுகாதார டிராக்டர் டிரைவர் திரு. மு. சண்முகம், டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய் கலந்து வண்டி ஓட்டி வருவதால் டிராக்டர் அடிக்கடி பழுதுபட்டு வருவதாக திருவைகுண்டம் சிறப்புச் சிற்றூராட்சி மன்ற உறுப்பினர்கள் அளித்த 31.5.2006 நாளிட்ட புகாரின் அடிப்படையில், அன்று முதல் வாங்கப்படும் டீசல் எண்ணெயை துப்புரவு மேற்பார்வையாளர்கள் மேற்பார்வையில் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்றும், சின்னச்சின்ன பழுதுகளை உடனடியாக சரிசெய்து வண்டியை பணிக்கு இடையூறின்றி ஓட்டிடவேண்டும் என்றும், பணியில் தவறும் பட்சத்தில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ திருவைகுண்டம் பேரூராட்சியின் 17வது வார்டு உறுப்பினரும், இப்புகார் மனுதாரருமான திரு. மு. பொன்பாண்டி, திரு. மு. சண்முகம் என்பவர் மீது டீசல் வாங்கியதில் முறைகேடு நடந்துள்ளதாகவும், அவர் மீது நடவடிக்கை எடுத்து வேறு இடத்திற்கு அவரை மாற்றம் செய்யக்கோரி உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டபோது, திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வருகை தந்து சம்மந்தப்பட்ட பணியாளர் மீது விசாரணை மேற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததன் அடிப்படையில், உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டு, அதற்கான ஆவணத்தில் திருவைகுண்டம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் திரு. M. பொன்பாண்டி ஆகியோர் 6.9.2006 தேதியிட்டு கையெழுத்திட்டுள்ளனர்.

❖ இதன் பின்னர் திருவைகுண்டம் பேரூராட்சி இழுவை ஓட்டுநர் திரு. மு. சண்முகம் 15.4.2020 முதல் கழுகுமலை பேரூராட்சிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டு, பின்னர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் 19.1.2021 நாளிட்ட செயல்முறை ஆணையின் அடிப்படையில் மீண்டும் திருவைகுண்டம் பேரூராட்சிக்கு பணிமாறுதல் செய்யப்பட்டு 20.01.2021 முதல் பணியாற்றிவருவது திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையின்படி அறியப்படுகிறது.

- மேலும், மனுதாரர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு அளித்த 23.12.2019 நாளிட்ட புகார் மனு பேரூராட்சிகளின் இயக்குநரால் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன் மீது விசாரணை மேற்கொண்டு, அதன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு திருவைகுண்டம் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த ஆவணங்கள்/விசாரணை அறிக்கை ஆகியவற்றை திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவில்லை.

- திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சியில் இழுவை ஓட்டுநராக பணிபுரிந்துவரும் திரு. மு. சண்முகம் Log book–ஐ சரிவர பராமரிக்காமலும், தன்மீது அளிக்கப்பட்டுள்ள புகார் மனு தொடர்பாக செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக பணிக்கப்பட்டுள்ள போதிலும் log book-ஐ அளிக்காமல் காலம் தாழ்த்தி வந்து, விசாரணைக்கு இரண்டுநாள் முன்புதான் அளித்தாரென திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதும் இவரது கடமை தவறிய செயலையும், பணியில் கீழ்ப்படியாமையையும், பணிந்து நடவாமையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஆணையத்தில் காட்டப்பட்ட ஒரு லாக்புக்கில் சரிவர விவரங்கள் குறிக்கப்படவில்லை. பேரூராட்சி செயல் அலுவலர்கள் இதை சரிபார்க்காமல் ஓட்டுநரை விட்டுவைத்திருந்தது கண்டிக்கத்தக்கது.

- எனவே, திரு. மு. சண்முகம், திருவைகுண்டம் பேரூராட்சி இழுவை ஓட்டுநர் தமது கடமையில் முழு கவனம் செலுத்தாமல், பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளில் இதற்குமுன்னர் ஈடுபட்டிருப்பது எடுத்துரைக்கப்பட்டுள்ள சூழலில், தற்போதைய குற்றச்சாட்டுகளும், அதன்பேரில் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களும், ஓட்டுநர் திரு. மு. சண்முகம் என்பவர் மீது மிகுந்த ஐயப்பாடுகளை எழுப்புகிறது.

- It is simply shocking that a driver in a Town Panchayat office is wielding such clout and unwritten authority, indulging in acts beyond his calling and is able to get back to the same place by the orders of the successor Thoothukudi Collector in 2021 when he was transferred by the previous Collector on several issues in 2020. He has failed to maintain the log books of the vehicles he is using and thus defaulted in his basic duty as a driver. That this has not been taken note of by the Town Panchayat Executive Officers is a bad commentary on the state of the Town Panchayat office of Srivaikuntam.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், பல்வேறு முறைகேடுகள் குறித்து பல்வேறு காலக்கட்டங்களில் பலமுறை அறிவுறுத்தியும், ஒருமுறை பணிமாறுதல் மூலம் கழுகுமலை பேரூராட்சிக்கு மாற்றப்பட்டு, திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சிக்கு எட்டு

மாதங்களில் மீண்டும் பணிமாறுதல் பெற்று பணியாற்றிவரும் இழுவை ஓட்டுநரை உடனடியாக வேறொரு பேரூராட்சிக்கு பணிமாற்றம் செய்திடுமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இவரை திருவைகுண்டம் பேரூராட்சியில் மீண்டும் பணியமர்த்துவதை தவிர்க்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. மு. பொன்பாண்டி,
த/பெ. முத்தையா தேவர், 17வது வார்டு, 117/4 மகாதேவர் கோவில் தெரு,
திருவைகுண்டம், தூத்துக்குடி டாவட்டம்–628 601.

மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)

செயல் அலுவலர்,
திருவைகுண்டம் தேர்வுநிலை பேரூராட்சி, திருவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம்.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்